2024 ஜூன் 29]

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இதையெல்லாம் நீங்கள் பேசினால், எல்லாமே அவைக் குறிப்பில் ஏறாது. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: **

(ஆ) நெல்லுக்கான ஊக்கத்தொகை ஜூலை முதல் உயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா பகுதியில் மிகக் கடுமையான சவால்களுக்கு மத்தியில் கோடைக்காலத்தில் பயிர்களை பயிர் செய்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நெல்லுக்கான ஊக்கத்தொகை 1-9-2024 முதல் அமல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை 1-7-2024 முதல் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமருகிறேன்.

(இ) பண்ருட்டி தொகுதி, கலை, அறிவியல் கல்லூரி மற்றும் வேளாண்மைக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தளபதி அவர்கள் தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்று, நான்காண்டுகளுக்கான நிதிநிலை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.